# கடலூர் மாநகராட்சி

# நிர்வாக அறிக்கை

# 2023–2024

1865ம் ஆண்டு வரை வருவாய் கிராமங்களாக இருந்த பகுதிகளை இணைத்து 1866ல் திருப்பாதிரிப்புலியூர், புதுப்பாளையம், மஞ்சக்குப்பம், கடலூர் முதுநகர் மற்றும் வண்டிப்பாளையம் ஆகிய பகுதிகளை ஒன்று சேர்த்து கடலூர் நகர் பகுதியாக கடலூர் நகராட்சி என அமைக்கப்பட்டது.

கடலூர் நகராட்சியின் மொத்த பரப்பளவு 27.69 சதுர கிலோ மீட்டர் ஆகும். அரசு ஆணை எண் 238 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (தேர்தல்) நாள் 02.12.2008ன்படி கடலூர் நகராட்சி தேர்வு நிலை நகராட்சியாக இருந்த நிலையிலிருந்து சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது.

கடலூர் சிறப்பு நிலை நகராட்சியிலிருந்து அரசின் அவசர சட்டம் Ordinance 1/2021 நாள் 21.10.2021ன்படி மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது.

கடலூர் மாநகராட்சிக்கு நான்கு எல்லைகள் முறையே கிழக்கில் வங்காள விரிகுடாவும், மேற்கில் திருப்பாதிப்புலியூர் பகுதியும், தெற்கில் கடலூர் முதுநகர் பகுதியும் வடக்கே மஞ்சக்குப்பமும் எல்லைகளாக அமைந்துள்ளன.

கிழக்கு திசையில் கடல் பகுதியில் சில்வர் பீச் என்றழைக்கப்படும் வெள்ளிக் கடற்கரை அமைந்துள்ளது. கடலூர் நகரின் மையப்பகுதி MSL 1.3 மீட்டர் உயர்வில் உள்ளது.

மேற்கில் திருப்பாதிப்புலியூர் வருவாய் கிராமமாக அமைந்துள்ளது. கூத்தப்பாக்கம் செயின்ட் ஜோசப் பள்ளி சாலை வரை கடலூர் நகராட்சிக்கு மேற்கு எல்லையாக உள்ளது.

தெற்கு பகுதியில் பச்சையாங்குப்பம் கிராம இரட்டை ரோடு வரை தெற்கு எல்லையாக உள்ளது.

வடக்கு பகுதியில் தென் பெண்ணையாற்று கரை வரை வடக்கு எல்லையாக அமைந்துள்ளது.

கடலூர் நகராட்சி எல்லைப் பகுதி தொடர்பாக புதிய விரிவாக்கம் ஏதும் அறிக்கையாண்டில் மேற்கொள்ளப்படவில்லை. மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டதை

தொடர்ந்து எல்லை விரிவாக்கம் தொடர்பாக, அருகிலுள்ள 16 கிராமங்கள் கடலூர் மாநகராட்சியுடன் இணைக்க பிரேரணை பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

கடலூர் மாநகராட்சி பகுதி 45 வார்டுகளாக தொடர்ந்து அறிக்கை ஆண்டிலும் பராமரிக்கப்பட்டது. நகர்பகுதி மக்கள் தொகை 2011 கணக்கெடுப்பின்படி ஆண்கள் 85397 பெண்கள் 87630 மற்றவை 9 ஆக மொத்தம் 173636 ஆகும். அறிக்கை ஆண்டில் உத்தேச மக்கள் தொகை 198109.

__மாநகராட்சி உருவாக்கம்__

கடலூர் சிறப்பு நிலை நகராட்சியிலிருந்து அரசின் அவசர சட்டம் Ordinance 1/2021 நாள் 21.10.2021ன்படி மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு, கடலூர் மாநகராட்சியின் முதல் மாமன்ற உறுப்பினர்களுக்கான மறைமுக தேர்தல் 19.02.2022–இல் நடத்தப்பட்டது. கடலூர் மாநகராட்சிக்கு முதல் மேயர் ஆகவும் மற்றும் முதல் பெண் மேயருமாக திருமதி.சுந்தரி ராஜா அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார். துணை மேயராக திரு.பா.தாமரைச்செல்வன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

__மாமன்றம் :__

சென்னை உயர்நீதி மன்ற ஆணை எண் WP/ 33984/ 2016 நாள் 04.10.2016ன்படி உள்ளாட்சி தேர்தல் ஒத்திவைக்கப்பட்டதால், அரசாணை எண் 146 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 24.10.2016ன் மூலம் தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டதை தொடர்ந்து, அறிக்கையாண்டில் மன்ற கூட்டப் பொருள்களின் மீது ஆணையர், கடலூர் நகராட்சி மற்றும் தனி அலுவலரால் மன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு அரசு ஆணை எண் 1/2021 நாள் 21.10.2021–ன்படி 19.02.2022–இல் கடலூர் மாநகராட்சி 45 வார்டு பகுதியில் எல்லை மறுவரையறைப்படி நகர்மன்றத்திற்கான மறைமுக தேர்தல் நடைபெற்றது. தொடர்ந்து 2023–2024ம் நிதியாண்டில் மாமன்ற மேயராக வார்டு எண் 20–ன் மாமன்ற உறுப்பினர் திருமதி.சுந்தரி ராஜா, பி.ஏ., அவர்களும், வார்டு எண் 34–ஐ சார்ந்த திரு.தாமரைச்செல்வன், M.Com.,B.L.,அவர்கள் துணை மேயராகவும் அரசு ஆணைப்படி ஆறு வார்டு கமிட்டிகளும், அதைத் தொடர்ந்து உறுப்பினர்களும் பணி மேற்கொண்டனர்.

சிறப்பு நிலை நகராட்சியிலிருந்து மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டதை தொடர்ந்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க. எண் 2711/ 2016/மாநஅ1 நாள் 01.11.2021–ன்படி மாநகராட்சிக்குரிய நிலைக்குழுக்கள் 6 எண்ணிக்கை

1) கணக்குக் குழு 2) கல்விக் குழு 3) பொதுசுகாதாரக் குழு 4) வரிவிதிப்பு, நிதி மற்றும் வரி மேல்முறையீடுக் குழு 5) நகர திட்டமிடல் மற்றும் மேம்பாட்டுக் குழு 6) பணிகள் குழு ஆகியவை தோற்றுவிக்கப்பட்டது.

அறிக்கையாண்டில் 01.04.2023 முதல் 31.03.2024 வரை 374 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

1997ம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிகள் (நிலைக்குழுக்கள் அமைப்பு) விதிகளின் விதி எண் 5–ன்படி வரிவிதிப்பு மேல்முறையீட்டு குழு உறுப்பினர்களுக்கான தேர்தல் 27.072023 அன்று நடத்தப்பட்டது. இக்குழு மேற்படி விதிகளின்படி பெண்கள் மட்டுமே தேர்தலில் போட்டியிடலாம். அதன்படி 27.07.2023 நடத்தப்பட்ட வரிவிதிப்பு மேல்முறையீட்டு குழு உறுப்பினர் தேர்தலில் கீழ்க்குறிப்பிட்டவர்கள் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டார்கள்.

| வரிசை எண் | தேர்வு செய்யப்பட்ட உறுப்பினர்கள் திருமதிகள் | வார்டு எண் |
|---|---|---|
| 1 | ஆர்.கவிதா | 38 |
| 2 | ஜே, கிரேசி | 17 |
| 3 | ஜெ. சசிகலா | 25 |
| 4 | இ.செந்தில்குமாரி | 19 |
| 5 | ஐ.பார்வதி | 5 |
| 6 | ஏ.சுதா | 18 |
| 7 | ஆர்.சுபாஷிணி | 22 |
| 8 | எஸ்.விஜயலட்சுமி | 42 |
| 9 | எஸ். ஹேமலதா | 6 |

**ஆணையர் :**

01.04.2023 முதல் 24.07.2023 வரை திரு.எஸ்.கிருஷ்ணமூர்த்தி, ஆணையர் அவர்களும் 24.07.2023 முதல் அறிக்கை ஆண்டு வரையிலும் திரு.எம்.காந்திராஜ் அவர்கள் ஆணையராக பணி மேற்கொண்டார்கள்.

**01.04.2023 முதல் 31.03.2024 வரை பணிபுரிந்த அலுவலர்களின் விபரம்**

**2023–2024 நிதியாண்டு**

| வ. எண் | பெயர் மற்றும் பதவி | பணிபுரிந்த காலம் | தற்பொழுது பணிபுரியும் முகவரி |
|---|---|---|---|
| | **நகராட்சி ஆணையர்கள்** | | |
| 1 | திரு.எஸ்.கிருஷ்ணமூர்த்தி, ஆணையர் | 01.04.2023 முதல் 24.07.2023 | சிவகாசி நகராட்சி |
| 2 | திரு.எம்.காந்திராஜ், ஆணையர் | 24.07.2023 முதல் 31.03.2024 | திருவண்ணாமலை மாநகராட்சி |
| II | **மேலாளர்** | | |
| 1 | திரு.எம்.கே.முனுசாமி, கணக்கர் (ம) மேலாளர் (பொ) | 01.04.2023 முதல் 30.09.2023 வரை | பணியிலிருந்து ஓய்வு |
| | திரு.நூர் அலி , கண்காணிப்பாளர் (மேலாளர் கூடுதல் பொறுப்பு) | 01.10.2024 முதல் 31.03.2024 வரை | கடலூர் மாநகராட்சி |

| | | | |
|---|---|---|---|
| III | **வருவாய் அலுவலர்** | | |
| 1 | திரு.சந்தானநாராயணன், உதவி ஆணையர் | 14.03.2024 முதல் 31.03.2024 வரை | பணியிலிருந்து ஓய்வு |
| 2 | திரு.அசோகன், ஆர்.<br>வருவாய் ஆய்வர் (ம) வருவாய் அலுவலர் (பொ) | 01.04.2023 முதல் 31.03.2023 வரை | கடலூர் மாநகராட்சி |
| | | | |
| IV | **நகராட்சி பொறியாளர்கள்** | | |
| 1 | மாலதி, செயற்பொறியாளர் | 01.04.2023 முதல் 01.08.2023 வரை | விழுப்புரம் நகராட்சி |
| 2 | குருசாமி, செயற்பொறியாளர் | 02.08.2023 முதல் 01.03.2024 வரை | பணியிலிருந்து ஓய்வு |
| 3 | சி.ரெகுராமன், உதவி செயற்பொறியாளர் | 14.03.2024 முதல் 31.03.2024 வரை | பணியிலிருந்து ஓய்வு |
| | | | |
| V | **உதவிப் பொறியாளர்கள் / இளநிலை பொறியாளர்கள்** | | |
| 1 | திருமதி.எம்.எஸ்.கலைவாணி, உதவி பொறியாளர் | 01.04.2023 முதல் 31.03.2024 வரை | கடலூர் மாநகராட்சி |
| 2 | திருமதி.து.பாரதி,<br>உதவி பொறியாளர் | 28.02.2024 முதல் 31.03.2023 வரை | கடலூர் மாநகராட்சி |
| 3 | திரு.நாகராஜன்,<br>இளநிலை பொறியாளர் | 01.04.2023 முதல் 17.07.2023 வரை | கடலூர் மாநகராட்சி |
| 4 | சி.பழனி, உதவி பொறியாளர் | 01.04.2023 முதல் 21.09.2023 வரை | வேலூர் மாநகராட்சி |
| VI | **நகர திட்டமிடுநர்** | | |
| 1 | எஸ்.முரளி, நகரமைப்பு அலுவலர் | 01.04.2023 முதல் 18.01.2024 வரை | கடலூர் மாநகராட்சி |
| 2 | பி.கலைவாணி, நகர திட்டமிடுநர் | 01.09.2023 முதல் 20.03.2024 வரை | நாமக்கல் மாநகராட்சி |
| 3 | எம்.ராஜசேகரன், நகர திட்டமிடுநர் | 21.03.2024 முதல் 31.03.2024 | |
| VII | **நகரமைப்பு ஆய்வர்கள்** | | |
| 1 | திரு.ஜி.அருள்செல்வன்,<br>நகரமைப்பு ஆய்வர் | 01.04.2022 முதல் 24.2023 வரை | கடலூர் மாநகராட்சி |
| | திருமதி. டி.பாரதி, உதவி பொறியாளர் (ம)<br>நகரமைப்பு ஆய்வர் (கூ.பொ) | 01.04.2022 முதல் 31.01.2023 வரை | கடலூர் மாநகராட்சி |
| VIII | **நகர் நல அலுவலர்** | | |
| 1. | திரு.அப்துல் ஜாபர்,<br>துப்புரவு ஆய்வர் | 01.03.2023 முதல் 31.07.2023 வரை | கடலூர் மாநகராட்சி |
| | திரு.எம்.காந்திராஜ். ஆணையர் (ம) நகர்நல அலுவலர் (பொ) | 01.08.2023 முதல் 05.10.2024 வரை | திருவண்ணாமலை மாநகராட்சி |

| | | | |
|---|---|---|---|
| | மரு. டி.பி.எழில்மதனா,<br>நகர்நல அலுவலர் | 05.10.2024 முதல் 31.03.2024 வரை | கடலூர் மாநகராட்சி |
| VIII | **வருவாய் ஆய்வர்கள்** | | |
| 1 | திரு.அசோகன்,<br>சிறப்பு வருவாய் ஆய்வர்<br>மஞ்சக்குப்பம், முதுநகர் | 01.04.2023 முதல் 31.03.2024 வரை | கடலூர் மாநகராட்சி |
| 2 | திரு. பாஸ்கரன்,<br>வருவாய் ஆய்வர்<br>புதுப்பாளையம், திருப்பாப்புலியூர் | 01.04.2023 முதல் 31.03.2024 வரை | கடலூர் மாநகராட்சி |
| | | | |
| **IX** | **கணக்காளர்** | | |
| 1 | திரு.எம்.கே.முனுசாமி,<br>கணக்கர் | 01.04.2023 முதல் 30.09.2023 வரை | பணியிலிருந்து ஓய்வு |
| 2 | திருமதி.அ.உமா,<br>கணக்கர் உதவியாளர் | 01.04.2023 முதல் 21.08.2024 வரை | கடலூர் மாநகராட்சி |
| 3 | திரு.ந.காதர்நவாஸ்,<br>கண்காணிப்பாளர் )ம)<br>கணக்கர் (பொ) | 22.08.2023 முதல் 31.03.2024 வரை | கடலூர் மாநகராட்சி. |

**மாநகர செயற்பொறியாளர் :**

அறிக்கையாண்டில் பணிபுரிந்த நகரரட்சி பொறியாளர்களின் விவரம்

01.04.2023 முதல் 01.08.2023 வரை திருமதி.கே.மாலதி, நகராட்சி பொறியாளராகவும் திரு.குருசாமி, செயற்பொறியாளர் 02.08.2023 முதல் 01.03.2024 வரையிலும், திரு.சி.ரெகுராமன், உதவி செயற்பொறியாளர், செயற்பொறியாளராக 01.03.2024 முதல் கூடுதல் பணியும் மேற்கொண்டார்கள்.

**மாநகர திட்டமிடுநர் :**

01.04.2023 முதல் 18.01.2024 வரை திரு.எஸ்.முரளி, என்பவர் நகரமைப்பு அலுவலராக பணிபுரிந்துள்ளார். திருமதி.பி.கலைவாணி என்பவர் 01.09.2023 முதல் 20.03.2024 வரை மாநகர திட்டமிடுநர் ஆகவும், 21.03.2024 முதல் 31.03.2024 வரை திரு.எம்.ராஜசேகரன் என்பவர் மாநகர திட்டமிடுநர் ஆகவும் பணிபுரிந்துள்ளார்கள்.

**நகரமைப்பு ஆய்வர்கள்**

திரு.ஜி.அருள்செல்வம், 01.04.2023 முதல் 24.07.2023 வரை நகரமைப்பு ஆய்வராக பணியாற்றி வந்தார்.

திருமதி.டி.பாரதி, உதவி பொறியாளர் 25.07.2023 முதல் 31.08.2023 வரை நகரமைப்பு ஆய்வராக கூடுதல் பொறுப்பு வகித்தார்.

01.09.2023 முதல் அறிக்கையாண்டு முடியும் வரை இப்பணியிடம் காலியாகவே உள்ளது.

வருவாய் அலுவலர்

திரு.ஆர்.அசோகன், வருவாய் ஆய்வர் 01.04.2023 முதல் 19.01.2024 லரை வருவாய் அலுவலராக கூடுதல் பணி பார்த்து வந்தார். திரு.எஸ்.சந்தானநாராயணன், உதவி ஆணையர் (வருவாய் / பணியமைப்பு) 20.01.2024 முதல் 31.03.2024 வரை வருவாய் அலுவலராக பணிபுரிந்து வந்தார்.

**வருவாய் ஆய்வர்கள்**

| **வ.எண்** | **பெயர் மற்றும் பகுதி** | பணியாற்றிய காலம் |
|---|---|---|
| 1 | திரு.அசோகன், வருவாய் ஆய்வர்<br>மஞ்சக்குப்பம், முதுநகர் | 01.04.2023 முதல் 31.03.2024 வரை |
| 2 | திரு. பாஸ்கரன், வருவாய் ஆய்வர் (சிறப்பு)<br>புதுப்பாளையம், திருப்பாப்புலியூர் | 01.04.2023 முதல் 31.03.2024 வரை |

**மேலாளர் :**

இம் மாநகராட்சியில் 01.04.2023 முதல் 30.09.2023 வரை திரு.எம்.கே.முனுசாமி, கணக்கர், மேலாளராக கூடுதல் பொறுப்பு பணிபுரிந்துள்ளார். அறிக்கையாண்டு முடியும் வரை இப்பணியிடம் காலியாகவே உள்ளது. திரு.என்.நூர்அலி, கண்காணிப்பாளர் மேலாளராக கூடுதல் பொறுப்பு வகித்து வந்தார்.

**மாநகர் நல அலுவலர் :**

மாநகர் நல அலுவலர் பணியிடம் காலியாக இருந்த நிலையில், மூத்த நிலையில் இருந்த திரு.அப்துல் ஜாபர், துப்புரவு அலுவலர் , மாநகர நல அலுவலராக 01.04.2023 முதல் .. .. வரை கூடுதல் பொறுப்பு வகித்து வந்தார். 05.10.2023 முதல் அறிக்கையாண்டு முடியும் வரையில் மரு.டி.பி.எழில்மதனா மாநககர் நல அலுவலராக பணிபுரிந்துள்ளார்.

**மண்டலம் :**

கடலூர் சிறப்பு நிலை நகராட்சியிலிருந்து அவசர சட்டம் 1/2022 நாள் 04.11.2022–இன் மூலம் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு ஆணையிடப்பட்டது. அதன்படி, தற்பொழுதுள்ள 45 வார்டு பகுதிகள் 4 மண்டலங்களாக பிரிக்கப்பட்டு, கீழ்க்குறிப்பிட்டவாறு வார்டு பகுதிகள் மன்றத் தீர்மான எண் 191 நாள் 30.11.2021 மூலம் அனுமதிக்கப்பட்டது. அறிக்கையாண்டில் மாற்றம் எதுமில்லை.

**<u>மண்டல எல்லைகள்</u>**

| வ.எண் | மண்டலம் விபரம் |
|---|---|
| 1 | மண்டலம் 1 வார்டுகள் 1 முதல் 11 வரை |
| 2 | மண்டலம் 2 வார்டுகள் 12 முதல் 22 வரை |
| 3 | மண்டலம் 3 வார்டுகள் 23 முதல் 33 வரை |
| 4 | மண்டலம் 4 வார்டுகள் 34 முதல் 45 வரை |

மண்டல நிர்வாகத்திற்கு கீழ்க்குறிப்பிட்ட இடங்களில் புதிய மண்டல அலுவலகங்களுக்கு கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது.

| மண்டலம் | மண்டல அலுவலகம் அமையவுள்ள இடத்தின் விபரம் |
|---|---|
| 1 | வார்டு 2 குண்டுசாலை பிரிவு அலுவலகம் அருகே |
| 2 | வார்டு 20 புதுப்பாளையம் மீன் அங்காடி அருகில் |
| 3 | வார்டு 31 சரவணா நகர் பிரிவு |
| 4 | வார்டு 39 கடலூர் முதுநகர் சுகாதார அலுவலகம் அருகே |

**பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டது :**

அரசாணை எண் 152 (ப) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம்.சி.6) துறை நாள் 20.10.2022ன்படி பணியிடங்கள் ( Post sanction) அனுமதிக்கப்பட்டது. அறிக்கை ஆண்டில் மாற்றம் ஏதுமில்லை. 31.03.2024ல் காலிப்பணியிட விபரம் –

| Sl.No. | Name of the Post | Sanctioned | Filled | Vacant |
|---|---|---|---|---|
| 1 | Commissioner (JD Cadre) | 1 | 1 | 0 |
| 2 | Deputy Commissioner (JD Cadre) | 0 | 0 | 0 |
| 3 | AC (Zone) 1 Grade Commr. | 4 | 0 | 4 |
| 4 | AC (Revenue) | 0 | 0 | 0 |
| 5 | AC (Personnel) | 0 | 0 | 0 |
| 6 | AC (Accounts) | 0 | 0 | 0 |
| 7 | AC (Personnel/Revenue ) Sel.Grade Commr. | 1 | 1 | 0 |
| 8 | Accounts Officer | 1 | 0 | 1 |
| 9 | Council Secretary | 1 | 0 | 1 |
| 10 | Public Relation Officer | 0 | 0 | 0 |
| 11 | Administrative Officer | 1 | 0 | 1 |
| 12 | Revenue Officer | 0 | 0 | 0 |
| 13 | Superintendent | 6 | 6 | 0 |
| 14 | Assistant Revenue Officer | 4 | 0 | 4 |
| 15 | Assistant | 11 | 6 | 5 |

| | | | | |
|---|---|---|---|---|
| 16 | Personal Clerk | 3 | 0 | 3 |
| 17 | Junior Assistant | 13 | 11 | 2 |
| 18 | Driver | 2 | 9 | 0 |
| 19 | City Health Officer | 1 | 1 | 0 |
| 20 | Assistant City Health Officer | 0 | 0 | 0 |
| 21 | Vetinary Medical Officer | 0 | 0 | 0 |
| 22 | Sanitary Officer | 4 | 2 | 2 |
| 23 | Sanitary Inspector | 12 | 1 | 11 |
| 24 | Entamologist | 0 | 0 | 0 |
| 25 | City Engineer | 1 | 1 | 0 |
| 26 | Executive Engineer | 0 | 0 | 0 |
| 27 | Assistant Executive Engineer | 1 | 0 | 1 |
| 28 | Assistant Engineer / Junior Engineer | 8 | 1 | 7 |
| 29 | Draughtsman | 1 | 0 | 1 |
| 30 | Technical Assistant / Public Works Overseer | 16 | 2 | 14 |
| 31 | Electrical Superintendent | 0 | 0 | 0 |
| 32 | Junior Engineer (Automobile) | 0 | 0 | 0 |
| 33 | City Planner | 1 | 1 | 0 |
| 34 | Assistant City Planner | 1 | 0 | 1 |
| 35 | Planning Inspector | 8 | 0 | 8 |
| | **TOTAL** | **102** | **42** | **60** |

**பணியமைப்பு செலவு :**

இந்நகராட்சியில் அனைத்து பணியாளர்களுக்கும் ஊதியம் பணியமைப்பு செலவு ரூ. .. .. இலட்சங்கள் செலவிடப்பட்டது.

**கணிப்பொறிமயமாக்குதல் :**

UTIS என்ற அரசின் மென்பொருள் மூலம் அலுவலக கணக்குகள் மற்றும் சேவை பணிகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அறிவுரைகளின்படி அலுவலக கணக்குகள் மற்றும் சேவை பணிகள் யாவும் CWBS-Combined Web based Service ஒருங்கிணைந்த வலைதள அடிப்படையிலான மென்பொருள் வாயிலாக அலுவலக கணக்குகள் மற்றும் சேவைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது

சேவைப்பணிகளின் ஒரு பகுதியாக, பொதுமக்கள் சொத்து வரி, குடிநீர் கட்டணம், வரியில்லா வாடகை குத்தகை மற்றும் பாதாள சாக்கடைக்கான மாதாந்திர கட்டணம் யாவும் எளிதாக செலுத்திட ஏதுவாக நகரின் முக்

கிய பகுதிகளான திருப்பாப்புலியூர் இரயில் நிலையம் அருகில், மாநகராட்சி பெண்கள் குழந்தைகள் மருத்துவமனை வளாகத்தில் ஒரு சேவை மையமும், மஞ்சக்குப்பம் மணிக்கூண்டு

வளாகத்தில் ஒருசேவை மையமும், கடலூர் மாநகராட்சி அலுவலக வளாகத்தில் ஒரு சேவை நிலையமும் அமைக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்பட்டது.

மேற்படி சேவைப்பணிகளை தொடர்ந்து, பிறப்பு இறப்பு சான்றுகள் 1992க்கு பிறகுள்ள பதிவுகள் மென்பொருள் வழியாக பதிவேற்றம் செய்யப்பட்டு, பொதுமக்கள் விண்ணப்ப அடிப்படையில் கணினி சான்றுகள் வழங்கப்பட்டு வரப்படுகிறது.

நடப்பு பிறப்பு இறப்பு சான்றை பொறுத்தவரை, தொடர்புடைய பிறப்பு இறப்பு நிகழ்ந்த மருத்துவமனை மூலம் வலைதளத்தில் பதிவேற்றம் செய்தும், உரிய கண்காணிப்பு அடிப்படையில் பொதுமக்களுக்கு பிறப்பு இறப்பு சான்றுகள் வழங்கப்பட்டு வரப்படுகிறது. அறிக்கை ஆண்டு முதல் நடப்பு கால பிறப்பு இறப்பு சான்றை பொதுமக்களே நேரடியாக வலைதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

சேவைப்பணிகளில் ஒரு பகுதியாக கட்டிட அனுமதிக்கான விண்ணப்பங்கள் யாவும் CWBS வலைதளத்தில் பொதுமக்களால் நேரடியாக பதிவேற்றம் செய்து விண்ணப்பிக்க வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

நிலஅளவை தொடர்பான பணிகள் மேற்கொள்ள நில அளவர் நிலை 1 நிலையில் மாநகராட்சி அலுவலக வளாகத்திலேயே வருவாய் வட்டாட்சியர் துறை மூலம் பணியாளர் நியமிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

கட்டிட அனுமதி கோரும் விண்ணப்பங்கள் யாவும் அரசின் வழிகாட்டுதல்படி மென்பொருள் வழி பதிவேற்றம் செய்து அனுமதி விபரங்கள் Plan Approval பெற்றுக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அறிக்கை ஆண்டில் ஒப்புதல் செய்யப்பட்ட குடியிருப்பு கட்டிடங்கள் 218 ஆகும். வியாபார நோக்கு கட்டிடங்கள் 28 ஆகும்.

**மின் ஒப்பந்தப்புள்ளி முறை :**

2010 ஆகஸ்ட் முதல் ஒப்பந்தப்புள்ளி முறைகள், வலைதளத்திலும் பதிவேற்றம் செய்யப்பட்டு, அவ்வப்பொழுது அரசின் வழிகாட்டுதல்படி செயல்படுத்தப்பட்டு வரப்படுகிறது.

**ஆண்டுக் கணக்குகள் :**

01.4.2000முதல் இயல்புமுறை கணக்கு நடைமுறையில் இருந்த நிலையில், தற்பொழுது நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் உத்தரவுப்படி CWBS- Combined Web based Service இணையதளம் மூலம் TAMILNADU URBAN SEVA என்ற மென்பொருள் இணைய வழியாக பட்டிகள் இடும் முறையும் voucherகள் போடும் முறையும், ஆண்டு கணக்கு இதன் வழி கண்காணிக்கவும், தொடர்ச்சியாக உள்ளாட்சி நிதி தணிக்கை துறை மேற்படி பதிவுகளை எளிய முறையில் பார்த்திடவும் அறிக்கை ஆண்டில் பணி பார்க்கப்பட்டது.

புதிய மென்பொருள் இணைய வழி கணக்கு 2021–22 மற்றும் 2022–2023 ஆகிய நிதி ஆண்டுகள் கணக்குகள் முடிக்கப்பட்டது. அறிக்கை ஆண்டில் 01.04.2023 முதல் 30.09.2023 வரை திரு.எம்.கே.முனுசாமி கணக்கராகவும், மேலாளராகவும் இருந்துள்ளார்.

**அச்சு மற்றும் எழுதுபொருட்கள் :**

எழுதுபொருட்கள் மற்றும் படிவங்கள் கூட்டுறவு நிறுவனம் மூலம் பெறப்பட்டது. அறிக்கை ஆண்டு செலவு ரூ. 15.00 இலட்சங்கள். இவை முந்தைய ஆண்டில் ரூ. 19.00 இலட்சம் செலவு செய்யப்பட்டது.

அனுமதிக்கப்பட்ட மூன்று தட்டச்சர் பணிகள் தொடர்ந்து காலியாக இருந்த நிலையில், இம்மாநகராட்சிக்கு ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட புள்ளிவிவர தொகுப்பாளர் பணியிடம் காலியாக இருந்ததால் நிர்வாக நலன் கருதி, 3 தட்டச்சர் மற்றும் 1 புள்ளிவிவர தொகுப்பாளர் பணியிடங்களுக்கு அலுவலக தினசரி தட்டச்சு பணிகள் மாவட்ட ஆட்சியர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட அத்தியாவசிய பணிகளுக்கான கூலி விபர அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, குறைந்த அளவு ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாளர் ரவிச்சந்திரன் என்ற நிறுவனம் மூலம் ஒப்பந்தப் பணி மேற்கொள்ளப்பட்டு வரப்பட்டது. அறிக்கை ஆண்டில் இப்பணிக்கான செலவு ரூ. 10.25 இலட்சம்.

**வழக்குகள் :**

அறிக்கையாண்டில் தொடரப்பட்ட புதிய வழக்குகள் .. ஆகும்.

அறிக்கையாண்டில் முடிவுற்ற வழக்குகளின் எண்ணிக்கை ...

சொத்துவரி மற்றும் வரியில்லா இனங்களில் வழக்கால் சூழப்பட்டு வசூல் ஆகாமல் நிலுவை உள்ள தொகை ரூ. .. . .. இலட்சங்கள் ஆகும்.

இந்நகராட்சி வழக்குகள் நகர்மன்ற வழக்கறிஞர் திரு.எஸ்.சச்சிதானந்தம் அவர்களால் வழக்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப் பெற்றதை தொடர்ந்து 3/2022 முதல் திரு.ஜெயமணி , என்பவர் மாநகராட்சி வழக்கறிஞராக பணி மேற்கொண்டுள்ளார். 01.04.2023 முதல் 31.03.2024 வரையிலும் திரு.ஜெயமணி நகர்மன்ற வழக்கறிஞராக பணி மேற்கொண்டார்.

**பொறியியல் பிரிவு பணிகள் :**

இந்நகராட்சி பொறியாளர் நிலை I, செயற்பொறியாளர் நிலையை சார்ந்தவர் ஆவார். இந்நகராட்சிக்கு ஆறு உதவிப் பொறியாளர்கள், இரண்டு இளநிலை பொறியாளர், ஒரு வரைவாளர் மற்றும் இரண்டு பணி ஆய்வர் பணியிடங்கள் மற்றும் 16 தொழில்நுட்ப பணியாளர் பணியிடங்களும் அனுமதிக்கப்பட்டதாகும். 6 உதவிப் பொறியாளர்கள், இரண்டு இளநிலை பொறியாளர்கள் என்ற விகிதத்தில் அனுமதிக்கப்பட்டதில் தற்பொழுது ஒரு உதவிப் பொறியாளரும், ஒரு இளநிலை பொறியாளரும் பணிபுரிகின்றனர்.

அறிக்கையாண்டில் தெருவிளக்கு பணிகள் ஒப்பந்த அடிப்படையில் தனியார் மூலம் மேற்கொள்ளப்பட்டது. தெருவிளக்கு பணிக்கு அறிக்கையாண்டில் ரூ. .00 இலட்சம் செலவு செய்யப்பட்டது.

**சாலைகள் :**

| | | |
|---|---|---|
| அறிக்கை ஆண்டில் சிமெண்ட் சாலைகளின் நீளம் | .. | **166.399 கி.மீ** |
| தார்சாலைகளின் நீளம் | .. | **151.951 கி.மீ** |
| இதர சாலைகளின் நீளம் | .. | **32.709 கி.மீ** |
| மொத்த சாலைகளின் நீளம் | .. | **351.059 கி.மீ.** |

**அறிக்கையாண்டில் நடைபெற்று வரும் முக்கிய பணிகள்**

**கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம்(KNMT) 2021-22**

- இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு 33 வசந்தராயன்பாளையம் பகுதிகளில் நவீன எரிவாயு தகனமேடை அமைக்கும் பணி ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**மூலதன மானிய திட்ட நிதி (CGF) 2021-22**

- இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு 32 கரையேரவிட்டகுப்பம் பகுதிகளில் நவீன எரிவாயு தகனமேடை அமைக்கும் பணி ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் (TURIP) 2022-23**

- இம்மாநகராட்சி பகுதிகளில் ரூ.8.46 கோடி மதிப்பீட்டில் 52 எண்ணிக்கை சிமெண்ட் மற்றும் தார் சாலைப்பணிகள் 15.900 கி.மீ நீளத்திற்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**தூய்மை பாரத திட்டம்** 2.0 **(நகர்ப்புறம்) (SBM) 2022-23**

- ரூ.0.74 கோடி மதிப்பீட்டில் கம்மியம்பேட்டை உரக்கிடங்கில் கூடுதலாக உள்ள 11673 மீ3 திடக்கழிவுகளை பயோமைனிங் மூலம் அப்புறப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
- ரூ.0.85 கோடி மதிப்பீட்டில் திடக்கழிவு மேலாண்மை பணியில் பொருட்கள் மீட்பு வசதிகளை நிர்மாணித்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**15வது நிதிக்குழு திட்ட நிதி (15th FC) 2022-23**

- ரூ.0.97 கோடி மதிப்பீட்டில் 3 எண்ணிக்கை நகர்ப்புற நலவாழ்வு மைய கட்டிடங்கள் மற்றும் ஆய்வகக் கட்டிடம் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**அம்ரூத் 2.0 – 2022-23**

- இம்மாநகராட்சிக்குட்பட்ட கே.கே. நகர் மற்றும் நல்லான்செட்டி குளம் / ஞானப்பிரகாசம் காலனி ஆகிய நீர் நிலைகளை தூர் வாரி கரையினை பலப்படுத்தி நடைபாதை அமைக்கும் பணிகள் ரூ.0.94 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**SUIDF 2022-23**

- ரூ.8.80 கோடி மதிப்பீட்டில் கடலூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெரு விளக்குகளை எல்.இ.டி விளக்குகளாக மாற்றியமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
- ரூ.1.88 கோடி மதிப்பீட்டில் கடலூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 1287 எண்ணிக்கை புதிய தெரு விளக்குகள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) 2022-23**

- ரூ.17.90 கோடி மதிப்பீட்டில் கடலூர் மாநகராட்சிக்குட்பட்ட கடலூர் துறைமுகம் பக்தவச்சலம் மார்க்கெட், மஞ்சக்குப்பம், அண்ணா மார்க்கெட் மற்றும் திருப்பாதிரிப்புலியூர் பான்பரி மார்க்கெட் ஆகிய பகுதிகளில் மூன்று தினசரி சந்தைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

**சிறப்பு நிதி(Special Grant) 2022-23**

- மாநகராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள சிறப்பு நிதி ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் 4 எண்ணிக்கை மண்டல அலுவலக கட்டிடங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**நமக்கு நாமே திட்டம் (NNT) 2022-23**

- ரூ.1.03 கோடி மதிப்பீட்டில் கம்மியம்பேட்டை எரிவாயு தகன மேடை பராமரிப்பு மற்றும் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**மாநில பேரிடர் மீட்பு திட்ட நிதி (SDMF) 2022-23**

- 17.90 கி.மீ நீளத்திற்கு மழை நீர் வடிகால் அமைக்கும் 14 எண்ணிக்கையிலான பணிகள் ரூ.14.36 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு நிதி (NSMT) 2022-23**

- 11.78 கி.மீ நீளத்திற்கு 39 எண்ணிக்கை சிமெண்ட் மற்றும் தார் சாலை பணிகள் ரூ.5.09 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம்(KNMT) 2023-24**

- இம்மாநகராட்சிக்குட்பட்ட நாதன் நகர் குளம் தூர் வாரி மேம்படுத்தும் பணி ரூ.0.29 கோடி மதிப்பீட்டிலும், வண்ணான் குளம் தூர் வாரி மேம்படுத்தும் பணி ரூ.0.32 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
- இம்மாநகராட்சிக்குட்பட்ட ஈஸ்வரி நகர் பகுதியில் பூங்கா மேம்படுத்தும் ரூ.0.21 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு நிதி (NSMT) 2023-24**

- 6.23 கி.மீ நீளத்திற்கு 19 எண்ணிக்கை சிமெண்ட் மற்றும் தார் சாலை பணிகள் ரூ.2.48 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**அறிக்கையாண்டில் தெருவிளக்குகள் பராமரிப்பு விபரம்**

| | | | |
|---|---|---|---|
| 1) | குழல் விளக்குகள் | .. | 6842 |
| 2) | சோடியம் ஆவி விளக்குகள் | ... | 986 |
| 3) | உயர்கோபுர மின் விளக்குகள் | ... | 49 |
| 4) | மற்றவை .. | ... | 693 |

அறிக்கையாண்டில் தெருவிளக்கு பராமரிப்பிற்கு ரூ. **4.76** இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. தெருவிளக்குகள் எண்ணிக்கையில் **8428** விளக்குகள் உள்ளன. ஒளிர் விளக்குகள் அல்லாத பிற வகையான விளக்குகளை இயக்கி எரியூட்டி பராமரிப்புக்கு ஒரு மின்கம்பியாளர் மற்றும் ஒரு உதவியாளர் என்ற அளவுகோல்படி உரிய மின்கம்பியாளர் மற்றும் உதவியாளர் பணியிடங்கள் காலியாக இருந்ததால், பராமரிப்பு பணிகள் தனியார் மூலம் திருவாளர் நவநீதம், கடலூர் என்ற நிறுவனம் மேற்கொண்டது.

**<u>பாதாள சாக்கடை திட்டம்</u>**

கடலூர் மாநகராட்சி பாதாள சாக்கடை திட்டம் ரூ.65.14 கோடி மதிப்பீட்டில் G.O.(D) No.552/MA & WS (MA 2) dt.30.12.2009 அரசாணைப்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பணி மேற்கொள்ளப்பட்டு 23.10.2017ல் மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டது

மொத்தமுள்ள 45 வார்டுகளில் 27 வார்டுகளில் (1, 2, 4, 5, 11, 17, 18, 19, 20, 21, 22, 23, 24, 27, 30, 31, 32, 33, 34, 35, 36, 40, 41, 42, 43, 44 &45) முழுமையாகவும், 9 வார்டுகளில் (3, 10, 12, 14, 25, 26, 28, 29 & 39) பகுதியாகவும் செயல்படுத்தப்பட்டுள்ளது.

ஒரு பிரதான கழிவு நீரேற்ற நிலையம் 6 துணை கழிவு நிரேற்ற நிலையங்கள், 11, தூக்கு கழிவு நீரேற்ற நியைங்களும், ஆளிறங்கு குழி மூடிகள் **5406** எண்கள், கழிவு நீர் குழாய்கள் நீளம் 148.70 கி.மீ,இ 14134 வீடுகளுக்கு வீட்டிணைப்புகள் வழங்கும் வகையிலும் அமைக்கப்பட்டுள்ளது.

தற்போது **9450** கழிவு நீர் வீட்டு இணைப்புகள் வழங்கப்பட்டு **12.25** MLD கொள்ளளவு கொண்ட தேவனாம்பட்டினம் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு சுமார் 7 MLD அளவிற்கு கழிவு நீர் சுத்திகரிப்பு செய்து கெடிலம் ஆற்றில் கலக்கப்படுகிறது.

மீதமுள்ள 9 வார்டுகளில் (6, 7, 8, 9, 13, 15, 16, 37 & 38) முழுமையாகவும் 9 வார்டுகளில் (3, 10, 12, 14, 25, 26, 28, 29 & 39) பகுதியாகவும், பாதாள சாக்கடைத் திட்டத்தினை செயல்படுத்திட தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி மற்றும் மேலாண்மை கழகம், சென்னை மூலம் அனுப்ப்பபட்ட N.K. Buildcon Pvt. Ltd., இராஜஸ்தான் நிறுவனம் மூலம் விரிவான திட்ட அறிக்கையினை தயார் செய்து திட்ட மதிப்பீடு ரூ.229.25 கோடி என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, பாதாள சாக்கடை முழுமையாக செயல்படுத்தும் பணிக்கு ரூ.229.25 கோடி தேவையாக உள்ளது.

## CUDDALORE CITY MUNICIPAL CORPORATION
## UGSS

| | | |
|---|---|---|
| Name of the Corporation | CUDDALORE | |
| Corporation Upgraded Year | 2021 | |
| Total Aea of the Corporation | 27.69 Sq. km | |
| Population | 173636 (2011) | |
| Present Population | 198987 | |
| Total No. of Wards | 45 | |
| UGSS on covered Area | 27 Wards, (1, 2, 4, 5, 11, 17, 18, 19, 20, 21, 22, 23, 24, 27, 30, 31, 32, 33, 34, 35, 36, 40, 41, 42, 43, 44 &45) | |
| G.O. (D) No. 397 MA & WS (MA3) (1) dated 23.09.05 & G.O. No.(D) No.552 / MAWS (MA2) Dt. 30.12.2009 | Rs. 65.14 (Crores) | |
| Total Estimate cost of UGSS in Left out area and un-covered area | Rs.229.25 crores | |
| STP Design Quantity | Existing | New |
| | 12.25 MLD | 12.59 MLD |
| Pumping Stations | 7 Nos | 4 Nos. |
| Lifting Stations | 11 Nos | 10 Nos. |
| Length Pumping Main | 13 km | 9.15 km |
| Length Sewer Main | 148 km | 165 km |
| No.of HSC Provided | 14000 | 18857 |

### DETAILS OF UNDER GROUND SEWERAGE SCHEME

**UNDER GROUND DRAINAGE :**

| | |
|---|---|
| G.O. (D) No. 397 MA & WS (MA3) (1) dated 23.09.05 Administratively sanctioned for Rs.4040.51 lakhs | G.O. No.(D) No.552 / MAWS (MA2) Dt. 30.12.2009 Revised Administrative Sanction has been sanctioned for Rs.6514.00 lakhs |
| Ward covered<br>Fully -27 ( 1. 2. 4. 5. 11. 17 .18. 19. 20. 21. 22. 23. 24. 27. 30 .31. 32. 33. 34. 35. 36. 40. 41. 42. 43. 44. 44 & 45. )<br>Part- 9 ( 3. 10. 12. 14. 25. 26. 28. 29. & 39.) | Ward Uncovered<br>Fully -9 ( 6. 7. 8. 9. 13. 15. 16. 37 & 38. )<br>Part- 9 ( 3. 10. 12. 14. 25. 26. 28. 29. & 39.) |

**S.T.P. SITE** :

Total Land Purchased .. 26.33 Acres

Land required for S.T.P. (Survey No.1508) .. 6.88 Acres

Method of treatment .. ASP (Activated Sludge Process)

| | | |
|---|---|---|
| Capacity of STP | .. | 12.25 MLD |
| Total No. of Manholes | .. | 5406 |
| Total No. of house connections | .. | 14134(2385+11749) |
| Total length of Sewage line | .. | 148.70 Kms. |

**Pumping Station :**

| S. No | Place | Motors | |
|---|---|---|---|
| | | Rnning | Stand by |
| 1 | Varadharaja Nagar | 35 HP – 1 No | 20 HP – 2 Nos |
| 2 | Rajambal Nagar | 30 HP – 1 No | 20 HP – 2 Nos |
| 3 | Sinivasan Nagar | 20 HP – 1 No | 15 HP – 2 Nos |
| 4 | Mohan Singh Street | 20 HP – 1 No | 15 HP – 2 Nos |
| 5 | Chellankuppam (Mohini Bridge) | 60 HP – 1 No | 30 HP – 2 Nos |
| 6 | Manaveli | 15 HP – 1 No | 12.5 HP – 2 Nos |
| 7 | KK Nagar (MPS) | 40 HP – 1 No | 40 HP – 1 No<br>80 HP – 1 No |

**Lifting Stations :**

| S. No | Place | Motors | |
|---|---|---|---|
| | | Rnning | Stand by |
| 1 | Varadharaja Nagar | 7.5 HP – 1 No | 5 HP – 1 No |
| 2 | NGO Nagar | 4 HP – 1 No | 4 HP – 1 No |
| 3 | Logambal Koli Street | 7.5 HP – 1 No | 4 HP – 1 No |
| 4 | Mariyasoosai Nagar | 7.5 HP – 1 No | 4 HP – 1 No |
| 5 | S.N Chavadi | 15 HP – 1 No | 10 HP – 1 No |
| 6 | Karpagavinayagar Koil street | 5 HP – 1 No | 3 HP – 1 No |
| 7 | Kulandhai colony | 5 HP – 1 No | 3 HP – 1 No |
| 8 | Ennikaran thottam | 4 HP – 1 No | 2 HP – 1 No |
| 9 | Sippai Street | 6 HP – 1 No | 4 HP – 1 No |
| 10 | Sankaran Street | 4 HP – 1 No | 3 HP – 1 No |
| 11 | Devanampattinam STP | | |
| 11 | Tsunami Nagar Devanampattinam | 7.5 HP – 1 No | 5 HP – 1 No |

| | | | |
|---|---|---|---|
| **12** | Tsunami Nagar Eanikarenthottam | **7.5 HP – 1 No** | **5 HP – 1 No** |

**Under ground Drainage Deposit and Monthly Charges**

| Building Area | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | Domestic | Tarif | Non Domestic | Tarif | Industurial | Tarif |
| ➢ 500 Sq ft | 5000 | 70 | 10000 | 140 | 8000 | |
| 501Sq ft to 1200 Sq ft | 7000 | 80 | 21000 | 240 | 12000 | |
| 1201Sq ft to 2400 Sq ft | 9000 | 90 | 27000 | 270 | 16000 | |
| 24001Sqft to < | 12000 | 100 | 60000 | 500 | 20000 | |
| Special Category | 15000 | 120 | 150000 | 1200 | 50000 | |

**கல்வி நிதி**

சொத்துவரி கூறுகளில் அறிக்கையாண்டில் பெறப்பட்ட வரவு ரூ. 324.62 இலட்சம். இவற்றில் நூலக வரியாக செலுத்தப்பட வேண்டியது ரூ. 255.04 இலட்சத்தில் ரூ. 255.04 இலட்சம் செலுத்தப்பட்டது.

கல்வி நிதியிலிருந்து பள்ளிகள் பராமரிப்பிற்கு ரூ. 30.07 இலட்சம் செலவு செய்யப்பட்டது.

**நூலகம்**

கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2021–2022ன் கீழ் நவீன நூலக கட்டிடம் கட்டும் பணி ரூ.115.00 இலட்சம் அரசாணை எண் 99 ந.நி.ம. கு.வ.துறை நாள் 12.11.2021–இல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அறிக்கையாண்டில் நூலகம் செயல்படுத்தப்பட்டது. போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்ளும் மாணவ, மாணவியர்கள் அதிக பலன் பெற்றனர்.

**புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். பள்ளி சத்துணவு திட்டம்**

அரசின் குழந்தைகள் சத்துணவு திட்டம் இந்நகராட்சியின் 21 பள்ளிகளிலும் செயல்படுத்தப்பட்டது. அறிக்கையாண்டில் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்த மாணாக்கர்கள் எண்ணிக்கை

1 வயது முதல் 5 வயது வரை பயிலும் மாணவர்களில் பயனடைந்தவர்கள் 924, 6 வயது முதல் 12 வரை பயிலும் மாணவர்களில் பயனடைந்தவர்கள் 659 .

தமிழ்நாடு அரசு குழந்தைகள் பள்ளி சத்துணவுத் திட்டத்தில் அறிக்கையாண்டில் பயனடைந்தவர்கள் விபரம் **1583** ஆகும்.

**தமிழக முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்**

தமிழக முதலமைச்சரின் காலை உணவு தயாரித்து வழங்கும் திட்டத்திற்கு அரசாணை எண் 43 நாள் 27.02.2022ன்படி கடலூர் மாநகராட்சிக்கு 22 பள்ளிகளில் படிக்கும் சுமார் 1089 குழந்தைகளுக்கு காலை உணவு வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதற்காக மஞ்சக்குப்பத்திலுள்ள குண்டு சாலையில் மாநகராட்சிக்கு சொந்தமான சமுதாயக் கூடத்தில் சமையல் செய்து வழங்க தேர்வு செய்யப்பட்டு, சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

ஒரு மாணவருக்கு ஒரு நாளைக்கு ரூ.12.71 செலவினம் அரசால் கீழ்க்கண்ட உணவுகளுக்காக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

தினசரி காலை 7.30க்குள் உணவுகள் சமைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட 22 மாநகராட்சி பள்ளிகளுக்கும் இரண்டு வாகனங்கள் மூலம் ஏற்கனவே தயார் செய்யப்பட்ட வழித்தடம் மூலம் அனுப்பப்பட்டு அந்தந்த பள்ளி தலைமையாசிரியர்கள் வசம் ஒப்படைக்கப்படுகிறது. தேர்வு செய்யப்படும் சேவை வழங்குபவருக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட அட்டவணையின்படி காலை உணவுகள் வழங்கப்படும். என்ன வகை உணவு வழங்கப்பட்டது என்பதை அறிய பதிவேட்டில் பதியப்பட்டு தலைமையாசிரியர்கள் கையொப்பம் இட்டு பதிவேடு பராமரிக்கப்பட்டு வருகிறது. தயார் செய்யப்பட்ட உணவினை குழந்தைகளுக்கு வழங்கும் முன்பு தலைமையாசிரியர்கள் உறுதி செய்யும் பொருட்டு ருசி பார்த்து, சமைத்த உணவினை மாதிரி (Sample) எடுத்து வைத்துள்ளனர். <u>**உணவுப் பட்டியல்**</u>

| **திங்கட்கிழமை உப்புமா வகை** | **செவ்வாய்க்கிழமை கிச்சடி வகை** | **புதன்கிழமை பொங்கல் வகை** |
|---|---|---|
| ரவா உப்புமா + காய்கறி சாம்பார் | ரவா காய்கறி கிச்சடி | ரவா பொங்கல் + காய்கறி சாம்பார் |
| சேமியா உப்புமா + காய்கறி சாம்பார் | சேமியா காய்கறி கிச்சடி | வெண்பொங்கல் + காய்கறி சாம்பார் |
| அரிசி உப்புமா+காய்கறி சாம்பார் | சோள காய்கறி கிச்சடி | |
| கோதுமைரவா உப்புமா + காய்கறி சாம்பார் | கோதுமை ரவா காய்கறி கிச்சடி | |

| **வியாழக்கிழமை உப்புமா வகை** | **வெள்ளிக்கிழமை – கிச்சடியுடன் இனிப்பு** |
|---|---|
| சேமியா உப்புமா + காய்கறி சாம்பார் | ஏதாவது ஒரு கிச்சடி வகையுடன் |

| | |
|---|---|
| | (செவ்வாய்க்கிழமை உணவு வகையின்படி) |
| அரிசி உப்புமா + காய்கறி சாம்பார் | ரவா கேசரி |
| ரவா உப்புமா + காய்கறி சாம்பார் | சேமியா கேசரி |
| கோதுமை ரவா உப்புமா + காய்கறி சாம்பார் | |

ஒரு குழந்தைக்கு 150 முதல் 200 கிராம் உணவு மற்றும் 60 மி.கி. காய்கறியுடன் கூடிய சாம்பார் ஒரு வாரத்தில் குறைந்தது இரண்டு நாட்களாவது உள்ளூரில் கிடைக்கக் கூடிய சிறுதானியங்களால் தயாரிக்கப்பட்ட காலை உணவை வழங்க வேண்டும் என்ற அறிவுரை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

காலை உணவு வழங்கும் திட்டத்தினை திறம்பட செயல்படுத்துவதற்கு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை, ஊரக வளர்ச்சி, நகர்ப்புற நிர்வாகம், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், பள்ளிக்கல்வி, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் மற்றும் உணவுப் பாதுகாப்பு போன்ற பல துறை அலுவலர்களை கொண்ட மாநில, மாவட்ட மற்றும் பள்ளி அளவிலான கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக கடலூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு உணவு தயார் செய்ய திரு.ஏ.மாணிக்கவாசகம், திருமாணிக்குழி என்ற ஒப்பந்ததாரர் தெரிவு செய்யப்பட்டு, 08.09.2022 அன்று சோதனை முயற்சியாக (Trial run) உணவு தயாரிக்கப்பட்டு பள்ளிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. 16.09.2022 முதல் தெரிவு செய்யப்பட்ட அனைத்துப் பள்ளிகளிலும் உணவு வழங்குவதற்காக ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு பணியாளர் தேர்வு செய்யப்பட்டு, உணவு வழங்கும் பணி செம்மையாக நடைபெற்று வருகிறது.

கடலூர் மாநகராட்சிக்கு 22 பள்ளிகளில் படிக்கும் சுமார் 1089 குழந்தைகளுக்கு இரண்டு வழித்தடங்களில் உணவுகள் எடுத்துச் செல்லப்படுகின்றன. ஒரு வழித்தடத்தில் 12 பள்ளிகளும் மற்றொரு வழித்தடத்தில் 10 பள்ளிகளும் அமைந்துள்ளன.

**அம்மா உணவகம்**

கடலூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இரண்டு அம்மா உணவகங்கள் இயங்கி வருகின்றன.

1) உழவர் சந்தை அருகில் 2) அரசு தலைமை மருத்துவமனை வளாகம்

**மருத்துவம்**

கடலூர் பெருநகராட்சி 45 வார்டு பகுதிகளில் உள்ள குடியிருப்பு மக்கள் மருத்துவ வசதி பெற ஏதுவாக திருப்பாதிரிப்புலியூர், புதுப்பாளையம் மற்றும் முதுநகர் ஆகிய இடங்களில்

நகராட்சி மருத்துவமனைகள் பிரசவ வசதிகளுடன் செயல்பட்ட நிலையில், அரசின் குடும்ப நலத் திட்டத்தின்படி இந்திய மக்கள் தொகை திட்டம் V என்ற திட்டம் தொடங்கப்பட்டு அரசின் குடும்ப நலம் சார்ந்த பணிகள் இணைந்து மேற்கொள்ளப்பட்டது.

இப்பணிக்காக 5 மையங்கள் தொடங்கப்பட்டு, குடும்ப நலம் மற்றும் அலோபதி மருத்துவம் மேற்கொள்ளப்பட்டது. அரசு ஆணை நிலை எண் 299 மக்கள் நல்வாழ்வு /குடும்ப நலத்துறை நாள் 16.12.2016ன்படி, NUHM திட்டத்தின்படி மருத்துவமனைகள் மேம்படுத்தப்பட்ட நிலையை எட்ட நகர ஆரம்ப சுகாதார நிலையம் என பெயர் மாற்றியும், திருப்பாதிரிப்புலியூர், புதுப்பாளையம் மற்றும் முதுநகர் ஆரம்ப சுகாதார நிலையங்களில் தொற்று நோய் தடுப்பு பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

மருத்துவம், குடும்ப நலம், தாய்சேய்நலம், தொற்றுகள் கட்டுப்படுத்துவது ஆகியவை யாவும், தமிழக அரசின் துணை இயக்குநர், சுகாதார பணிகள் துறை மூலம் கண்காணிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி திருப்பாதிரிப்புலியூர் பகுதியில் பெண்கள் குழந்தைகள் மருத்துவமனையும், பொது மருத்துவமனையும் முறையே 1899 மற்றும் 1916 ஆகிய ஆண்டுகளில் தனியார் மூலம் நன்கொடையாக பெறப்பட்டது. தற்பொழுது தொடர்ந்து நகர்மன்றத்தால் பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது.

**முதுநகர் மருத்துவமனை** 1896ல் தொடங்கப்பட்டு 2004ம் ஆண்டு சுனாமி காலத்தில், தொண்டு நிறுவனத்தால் புதிய கட்டிடம் கட்டப்பட்டு, விரிவுபடுத்தப்பட்டது. தொடர்ந்து நகர்மன்றத்தால் பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது. தற்பொழுது இக்கட்டிடம் முதுநகர் நகர ஆரம்ப சுகாதார நிலையமாக பயன்படுத்தப்பட்டு வரப்படுகிறது. அறிக்கையாண்டில் இம்மருத்துவமனைக்கு நகர ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலராக மரு.பாஸ்கரன் என்பவர் பணி மேற்கொண்டார். திருப்பாதிரிப்புலியூர் நகர ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மரு.கிறிஸ்டி என்ற பெண் மருத்துவர் மருத்துவ அலுவலராக அயற்பணி முறையில் பணியாற்றினார். புதுப்பாளையம் நகர ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மருத்துவர் அயற்பணி முறையில் அறிக்கை ஆண்டு முழுவதும் பணியாற்றினார்.

**மருத்துவமனைகள் 2023–24**

கடலூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கீழ்க்கண்டவாறு 3 மருத்துவனைகள் சீரமைத்து கட்டுவதற்கு என்.எல்,.யு.எம். திட்டத்தின் கீழ் அனுமதி அளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

| | | | |
|---|---|---|---|
| 1) | புதுப்பாளையம் | . | 25.00 இலட்சம் |
| 2) | திருப்பாதிரிப்புலியூர் | .. | 25.00 இலட்சம் |
| 3) | முதுநகர் | .. | 25.00 இலட்சம் |
| 4) | திருப்பாதிரிப்புலியூர் | .. | 22.00 இலட்சம் |
| | **மொத்தம்** | .. | **97.00 இலட்சம்** |

**பொது சுகாதாரம் :**

கடலூர் பெருநகராட்சி (சிறப்பு நிலை) 11 துப்புரவு கோட்டங்களாக கோட்டம் ஒன்றிற்கு 4 வார்டுகள் வீதம் பிரிக்கப்பட்டு (Compost Yard) உரக்கிடங்கிற்கு கண்காணிப்பு செய்ய ஓர் துப்புரவு ஆய்வர் எனவும் ஆக மொத்தம் 11 + 1 துப்புரவு ஆய்வர் பணியிடங்களுக்கு அனுமதிக்கப்பட்ட நிலையில், அறிக்கையாண்டில் மூன்று துப்புரவு அலுவலர்கள் மற்றும் இரண்டு துப்புரவு ஆய்வர் மட்டும் பணி மேற்கொண்டனர்.

அரசின் அளவுகோல் (Norms) படி 22 துப்புரவு பணி மேற்பார்வையாளர் பணியிடங்கள் அனுமதிக்கப்பட வேண்டிய நிலையில் ஓய்வு பெற்றது, பணியிடை மரணங்கள் போன்ற காரணங்களால் அறிக்கையாண்டில் 13 துப்புரவு பணிமேற்பார்வையாளர்கள் மட்டுமே பணி மேற்கொண்டனர். நகர்ப்புற உள்ளாட்சி சட்டம் 2023ன்படி துப்புரவு மேற்பார்வையாளர்கள் பணியிடங்கள் vanished என்ற நிலையாக கருதி அனுமதிக்கப்பட்டது.

250 குடியிருப்புகளுக்கு 3 துப்புரவு பணியாளர்கள் என்ற அளவுகோல்படி நகர்பகுதியில் 49515 குடியிருப்புகளுக்கு 594 துப்புரவு பணியாளர்கள் தேவையாக இருந்த நிலையில் வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்றது ஆகிய காரணங்களால் தற்பொழுது 151 துப்புரவு பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகின்றனர். 25 % துப்புரவு பணியாளர்கள் உள்ள நிலையில், பொது சுகாதார அவசியம் கருதி காலிப் பணியிடங்கள் நிர்வாக காரணங்களால் நிரப்ப இயலாத காரணத்தினால் தினசரி துப்புரவு பணிகள் திருவாளர் City Clean, Chennai என்ற நிறுவனத்தால் ஒப்பந்தப்பணி மூலம் மேற்கொள்ளப்பட்டது.

திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிகள் தொடர்பாக பொதுமக்கள் விழிப்புணர்வு பெறவும், அரசின் கொள்கை விளக்கங்கள் பொதுமக்களை சேரும்பொருட்டும், பரப்புரையாளர்கள் (Animators) 22 பணியாளர்கள், அவர்களுடன் 3 மேற்பார்வையாளர்கள் மற்றும் ஒரு ஒருங்கிணைப்பாளர் ஆக மொத்தம் 26 நபர்கள் அறிக்கையாண்டில் பணிபுரிந்தனர்.

அறிக்கையாண்டில் கொசுப்புழு ஒழிக்கும் பணியில் ஈடுபடும் DBC எனப்படும் 91 பணியாளர்களை கொண்டு தொற்று கட்டுப்படுத்தும் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டது. இப்பணியாளர்கள் வீடுகள் தோறும் சென்று விழிப்புணர்வு நோட்டீஸ்கள் வழங்கியும், தேவையான கணக்கெடுப்பும் மேற்கொண்டு தடுப்பு பணிகள் மேற்கொண்டனர். அறிக்கை ஆண்டில் DBC பணியாளர்களுக்கு செலவு செய்யப்பட்ட தொகை ரூ. 60.00 இலட்சம் ஆகும்.

**உரக்கிடங்கு :**

கம்மியம்பேட்டை உரக் கிடங்கு Swach Bharat Misso 2.0 (U) திட்டத்தில் Bio Mining Process மேற்கொள்ளப்பட்டது.

கடலூர் மாவட்ட தலைநகரான இந்நகராட்சி 27.69 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டது. 2011ம் ஆண்டின் மக்கள் தொகை 173636 ஆகும்.

திடக்கழிவு மேலாண்மை திட்டம் செம்மையாக செயல்டுத்தப்பட்டு வரப்படுகிறது. தினசரி நாள் ஒன்றுக்கு சுமார் 47.00 மெட்ரிக் டன் குப்பைகள் சேகரம் செய்யப்பட்டு வரப்படுகிறது. நகராட்சியின் உரக்கிடங்குகள் விபரம்

| | | | |
|---|---|---|---|
| 1) | கம்மியம்பேட்டை உரக்கிடங்கு | .. .. | 6.09 ஏக்கர் |
| 2) | முதுநகர் பச்சையாங்குப்பம் உரக்கிடங்கு | .. | 2.05 ஏக்கர் |
| 3) | பச்சையாங்குப்பம் கிராமம் | .. .. | 0.40 ஏக்கர் |
| 4) | செம்மண்டலம் உரக்கிடங்கு | .. .. | 2.52 ஏக்கர் |
| 5) | வசந்தராயன்பாளையம் உரக்கிடங்கு | .. .. | 7.67 ஏக்கர் |
| | மொத்த கொள்ளளவு | .. .. | **18.73 ஏக்கர்** |

2025ம் ஆண்டு வரை மக்கள் தொகை ( Projected Population) படி 22.20 ஏக்கர் நிலம் தேவையாய் உள்ளது. STP பாதாள சாக்கடை சுத்திகரிப்பு நிலையத்திற்கு கிரையம் பெற்ற தேவனாம்பட்டினம் STP நிலையத்தில் 3 ஏக்கர் நிலம் கூடுதலாக கிரையம் பெற்று தேவையான அளவு உரக்கிடங்கிற்கு இடம் உள்ளது.

எதிர்காலத்தில் பெருகிவரும் மக்கள் தொகை சதவிகிதத்தை கருத்தில் கொண்டு சுமார் 15 ஏக்கர் அளவில் கூடுதல் குப்பை கொட்டும் இடம் கிரையம் பெற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.

**எம்.சி.சி.**

கடலூர் மாநகராட்சியில் கீழ்க்கண்ட விபரப்படி 3 பசுமை உரக் கிடங்குகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. நகரில் முதல் நிலை சேகரிப்பு மூலம் சேகரிக்கப்படும் மட்கும் குப்பைகளிலிருந்து இயற்கை உரம் தயார் செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

1. குண்டுசாலை M.C.C.
2. பாபு கலையரங்கம் M.C.C.
3. வசந்தராயன்பாளையம் M.C.C.

**பிறப்பு இறப்பு விகிதம் :**

அறிக்கையாண்டில் மொத்த பிறப்புகள் 1762 ஆகும். இறப்புகள் 1084 ஆகும். பிறப்பு விகிதம் கடந்த ஆண்டை விட 6 % உயர்வு. இறப்பு விகிதம் கடந்த ஆண்டை விட 3.0% குறைவு. அறிக்கையாண்டில் நகராட்சி மருத்துவமனைகளில் நிகழ்ந்த மகப்பேறுகள் 35.

**மரணங்களும் தொற்று நோய்களும் :**

01/04/2023 முதல் 31/03/2024 வரை 1084 இறப்புகள் இம்மாநகராட்சியில் பதிவு செய்யப்பட்டுள்ளன. டெங்கு காய்ச்சல். சிக்கன்குனியா, கோவிட் தொற்று ஆகியவை அரசின் அறிவுரைப்படி கட்டுக்குள் வைக்க உரிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. தற்போது 8 புகைபோக்கி கை தெளிப்பான்களும் 2 பெரிய புகைபோக்கி தெளிப்பான்களும் பயன்படுத்தப்பட்டு, கொசு ஒழிப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது மேலும் 91 டிபிசி

பணியாளர்கள் மகளிர் குழுக்கள் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணி அமர்த்தப்பட்டு, டெங்கு காய்ச்சல் தடுப்பு மற்றும் கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அறிக்கை ஆண்டில் டெங்கு மரணம் ஏதுமில்லை.

**<u>கடலூர் நகரத்தில் செயல்படுத்தப்படவுள்ள புதிய திட்டங்கள் :</u>**

**TNCRUDP நிதி** - 2023-24

- ❖ மாநகராட்சிக்குட்பட்ட விடுபட்டள்ள பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டத்தினை முழுமையாக செயல்படுத்திட ரூ.149.20 கோடி மதிப்பீட்டிலும், சுத்திகரிப்பு நிலையம் அமைக்க ரூ.26.56 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ள நடவடிக்கையில் உள்ளது.

**I & A நிதி 2023-24.**

- ❖ அரிசி பெரியாங்குப்பத்தில் புதிய பேருந்து நிலையம் ரூ.36.52 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள 19.02.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. மேற்படி பேருந்து நிலையம் புற நகர் பேருந்து நிலையமாக செயல்படும். ஏற்கனவே உள்ள மத்திய பேருந்து நிலையம் சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**அம்ரூத் 2.0 – 2023-24**

- ❖ 24X7 குடிநீர் விநியோகம் ரூ.26.66 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள 14.02.2024ல் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் உள்ளது.

**மூலதன மானிய திட்ட நிதி (CGF) 2023- 24**

- ❖ வெள்ளிக் கடற்கரை பூங்கா மேம்படுத்துதல் பணி ரூ.4.98 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள 03.01.2024 அன்று வேலைஉத்தரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ள நடவடிக்கையில் உள்ளது.

**நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2024-25**

- ❖ 16.275 கி.மீ நீளத்திற்கு தார்சாலைகள் அமைக்கும் பணி ரூ.7.80 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள 13.03.2024 அன்று வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2024-25**

- 2.267 கி.மீ நீளத்திற்கு தார் சாலைகள் அமைக்கும் பணி ரூ.1.68 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள 13.03.2024 அன்று வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**15 வது நிதிக்குழு மானிய நிதி 2023-24**

- 6.675 கி.மீ நீளத்திற்கு சிமெண்ட் சாலைகள் அமைக்கும் பணி ரூ.3.32 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள 13.03.2024 அன்று வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**15 வது நிதிக்குழு மானிய நிதி 2024-25**

- 5.632 கி.மீ நீளத்திற்கு சிமெண்ட் சாலைகள் அமைக்கும் பணி ரூ.2.65 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள 13.03.2024 அன்று வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**புதிய திட்டங்கள்** :

- ஆறாவது மாநில நிதிக்குழு 2023-24ன் கீழ் கடலூர் மஞ்சக்குப்பம் மைதானத்தினை சுற்றியுள்ள பகுதியில் வணிக வளாக கட்டிடம் கட்டும் பணி ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

**குடிநீர் விநியோகப் பணிகள் :**

கடலூர் பெருநகராட்சிக்கு தற்பொழுதுள்ள மக்கள் தொகை **198109** ஆகும். அரசின் அளவுகோல்படி **135** LPCD வழங்கப்பட வேண்டிய நிலையில் தினசரி **90** லிட்டர்களுக்கு குறையாது குடிநீர் வழங்கப்பட்டு வரப்படுகிறது.

பிரதான நீர் உந்து நிலையம் கேப்பர்மலை மற்றும் திருவந்திபுரம்

தினசரி நீர் ஆதார விபரங்கள்

| | | | |
|---|---|---|---|
| **1** | கேப்பர்மலை தலைமை நீரேற்று நிலையம் **12** ஆழ்துளை கிணறுகள் மூலம் | 4.45 | MLD |
| **2** | திருவந்திபுரம் தலைமை நீரேற்று நிலையம் **8** ஆழ்துளை கிணறுகள் மூலம் | 5.40 | MLD |
| **3** | சாவடி தலைமை நீரேற்று நிலையம் – பெண்ணை ஆற்று நீர் மற்றும் ஆழ்துளை கிணறுகள் ....... மூலம் | 1.50 | MLD |
| **4** | Combined Water Supply Scheme கொள்ளிடம் கூட்டுக் குடிநீர் திட்டம் – தற்பொழுது Trial Supply நிலை | 6.50 | MLD |
| | மொத்தம் | 17.85 | MLD |

அறிக்கை ஆண்டில் நபர் ஒருவருக்கு நாளொன்றுக்கு 90 லிட்டர் வீதம் தினசரி 18 MLD தேவையாக உள்ளது.

அறிக்கையாண்டு வரை 16632 இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. அறிக்கை ஆண்டில் புதிய நீரேற்று நிலையங்கள் ஏதும் உருவாக்கப்படவில்லை.

1)

| வரிசை எண் | மேல்நிலை தொட்டிகள் அமைந்துள்ள இடம் | கொள்ளளவு (இலட்சம் லிட்டர்கள்) |
|---|---|---|
| 1 | தீபன்நகர் | 15 |
| 2 | அண்ணாநகர் | 12 |
| 3 | திருப்பாப்புலியூர் | 10 |
| 4 | கே.கே.நகர் | 6 |
| 5 | பத்மாவதி நகர் | 2 |
| 6 | காமராஜர் நகர் | 2 |
| 7 | கம்மியம்பேட்டை | 2 |
| 8 | நேரு நகர் | 1 |
| 9 | தேவனாம்பட்டினம் | 1 |
| 10 | தேவனாம்பட்டினம் சுனாமி நகர் | 1 |
| 11 | கூத்தப்பாக்கம் | 1 |
| 12 | மரியசூசை நகர் | 2 |
| | மொத்த கொள்ளளவு | 55.00 இலட்சம் லிட்டர்கள் (அ) 5.5 எம்.எல்.டி. |

மேற்படி நீர்த்தேக்க தொட்டிகளுக்கு திருவந்திபுரம் நீரேற்று நிலையத்திலிருந்து குடிநீர் நிரப்பப்படுகிறது.

2)

| வரிசை எண் | மேல்நிலை தொட்டிகள் அமைந்துள்ள இடம் | கொள்ளளவு (இலட்சம் லிட்டர்கள்) |
|---|---|---|
| 1 | சரவணா நகர் | 15 |
| 2 | பச்சையாங்குப்பம் | 15 |
| 3 | நகராட்சி மருத்துவமனை ஓ.டி., | 6 |
| 4 | காசுக்கடை | 4.50 |
| 5 | சிவானந்தபுரம் | 2.00 |
| 6 | சோனாங்குப்பம் | 2 |
| 7 | ஏணிக்காரன்தோட்டம் சுனாமி குடியிருப்பு 1 | 1 |
| 8 | ஏணிக்காரன்தோட்டம் சுனாமி குடியிருப்பு 2 | 1 |
| 9 | வண்டிப்பாளையம் கீழ்நிலை குடிநீர்தொட்டி | 0.30 |
| 10 | போட்ஹவுஸ் முதுநகர் | 0.30 |
| 11 | புருகீஸ்பேட்டை | 1 |
| | மொத்த கொள்ளளவு | 48.00 இலட்சம் லிட்டர்கள் |

| | | |
|---|---|---|
| | | (அ) 4.8 எம்.எல்.டி., |

மேற்படி நீர்த்தேக்க தொட்டிகளுக்கு கேப்பர்மலை நீரேற்று நிலையத்திலிருந்து குடிநீர் நிரப்பப்படுகிறது.

3) மஞ்சக்குப்பம் மாவட்ட ஆட்சியர் முகாம் அலுவலகத்திற்கு அருகில் 11.35 இலட்சம்

மேற்படி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு சாவடி நீரேற்று நிலையத்திலிருந்து தினசரி குடிநீர் நிரப்பப்படுகிறது.

அறிக்கையாண்டில் புதிய குடிநீர் இணைப்புக்கு ரூ.4000/– முன்வைப்புத் தொகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

நிலையில் உள்ள pumping main நீளம் .. 60.69 கிமீ.

நிலையில் உள்ள Distribution main நீளம் .. 215.00 கிமீ.

அறிக்கையாண்டு முழுவதும் தினசரி 2 மணி நேரம்குடிநீர் வழங்கப்பட்டது. ஆழ்துளை கிணறுகளில் இணைக்கப்பட்டுள்ள மோட்டார்கள் ஒவ்வொன்றும் 35 குதிரைத்திறன் கொண்டது. இவையாவும் நீர்மூழ்கி மோட்டார் வகையை சார்ந்தது ஆகும். இவற்றின் மூலம் ஒரு நிமிடத்திற்கு 1000 லிட்டர் நீர் உறிஞ்சும் சக்தி உள்ளது.

**மழைநீர் சேகரிப்பு திட்டம் :**

அரசின் மழைநீர் சேகரிப்பு திட்டத்தின்படி புதிய கட்டிடங்கள் கட்ட அனுமதி கோரும் விண்ணப்பதாரரின் கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு மையம் அவசியம் அமைக்கப்பட வேண்டும் என அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. அறிக்கையாண்டில் 255 கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**பேருந்து நிலைய பராமரிப்பு :**

திருப்பாப்புலியூரில் உள்ள நகராட்சி பேருந்து நிலையம் **“ஏ”** வகுப்பை சார்ந்தது. தினசரி சுமார் 800 முறை பேருந்துகள் வந்து செல்கிறது. பேருந்து நிலையத்தில் 56 Bus Bay-க்கள் உள்ளது.

**புதிய பேருந்து நிலையம் :**

கடலூர் மாநகராட்சிக்குட்பட்ட வில்வராயநத்தம் கிராமம் வார்டு 7 பிளாக் 22 நகரளவு எண் 1690, 16903, 1694, 1695, 1696, 1697, 1698, 1699, 1710/1–ல் தமிழ்நாடு கரும்பு ஆராய்ச்சி பல்கலைகழகத்திற்கு சொந்தமான 18.58 ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தினை புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணிக்காக கடலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிலமதிப்புத் தொகை ரூ.154.59 இலட்சத்தை மாநகராட்சியில் அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறை திட்டம் 2017ன் வாயிலாக பெறப்பட்டு இருப்பில் உள்ள வருவாய்

தொகையிலிருந்து செலுத்தி கடலூர் மாநகராட்சி பெயருக்கு கிரையம் பெற்றுக் கொள்ளவும், நில உரிமை மாற்றம் செய்து கொள்ளவும் அரசாணை நிலை எண் 61 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.5(1) துறை நாள் 31.08.2021 ன்படி அனுமதி அளிக்கப்பட்டது.

இந்நிலையில் மேற்படி இடம் மிகவும் தாழ்வான பகுதியாக இருப்பதால் எதிர்புறம் உள்ள தென்பெண்ணையாற்றில் ஏற்பட்ட வெள்ளத்தின்போது பாதிப்படைந்ததாலும், புதியதாக அமைக்கப்பட்டு வரும் பிறவழிச்சாலையிலிருந்து இப்பேருந்து நிலையம் தொலைவில் இருப்பதாலும், குடியிருப்புகள் அடர்த்தி மிகுந்த பகுதியிலேயே இதனை அமைப்பதால், நகருக்கு எதிர்காலத்தில் மீண்டும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட வாய்ப்புள்ளதாலும், கடலூர் மாநகரை ஒட்டி தற்போது தேசிய நெடுஞ்சாலைத்துறையால் அமைக்கப்பட்டு வரும் விழுப்புரம் நாகப்பட்டினம் புறவழிச்சாலை அருகே அரிசிபெரியாங்குப்பம் கிராமம் அரசுக்கு சொந்தமான புல எண் 117/2ல் 07.23.20 ஹெக்டேர் (17.87 ஏக்கர்) இடத்தை புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கு நில உரிமை மாற்றம் செய்து பெற மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு பிரேரணை அனுப்பி வைக்கவும், இதற்கான நிர்வாக அனுமதி பெற நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு பிரேரணை அனுப்பி வைக்கவும், மாமன்ற தீர்மான எண் 135 நாள் 08.07.2022ல் மாமன்றத்தால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

புதிதாக தேர்வு செய்யப்பட்ட இடத்தில் ஒரு சிலரால் எதிர்ப்பு தெரிவிக்கப்ட்டதால், இது குறித்து கருத்து கேட்பு கூட்டம் நடத்த மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டதற்கிணங்க வருவாய் கோட்டாட்சியடர் தலைமையில் 20.07.2022 ம் தேதியில் அனைத்து கட்சி பிரமுகர்கள், பொதுமக்கள் குடியிருப்போர் நலச்சங்கம், தொண்டு நிறுவனங்கள் ஆகியோருடன் கருத்து கேட்பு கூட்டம் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் ஒரு சிலர் பழைய பேருந்து நிலையத்தையே விரிவுபடுத்தி அமைக்கலாம் என்றும், ஒரு சிலர் அரிசிபெரியாங்குப்பத்தில் அரசுக்கு சொந்தமான இடத்தில் அமைக்கலாம் எனவும், ஒரு சிலா இந்து சமய அறநிலைய துறைக்கு சொந்தமான பாதிரிகுப்பம் கொய்யாத்தோப்பில் அமைக்கலாம் எனவும், ஒரு சிலர் குமாரப்பேட்டையில் அரசுக்கு சொந்தமான இடத்தில் அமைக்கலாம் என்றும் பல்வேறு ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

மேலே கண்ட இடங்களை ஆய்வு செய்து, கடலூர் மாநகராட்சியின் புதிய பேருந்து நிலையம் அமைக்க தகுதியான இடம் குறித்து ஆய்வறிக்கை சமர்ப்பிக்க ( Feasibility Report ) மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டு இரண்டு வல்லுனர்கள் ( Consultant ) நியமிக்கப்பட்டது.

இவ்வல்லுனர்களில் Centre for Huma Settlements, Anna University வல்லுனரின் முதற்கட்ட கூராய்வில்

1) இடத்தின் பரப்பளவு, (Extent of Land) 2) வெள்ள மட்டம் (Elevation from Flood Level) 3) இடத்தின் வடிவம் (Form and shape of the site) 4) புறவழிச்சாலை அருகாமை (Nearness to the bye pass Road 5) நில உ ரிமை (Land Title ) ஆகிய காரணிகளை கருத்தில் கொண்டும்,

**<u>இரண்டாம் கட்ட கூராய்வில்</u>**

1) இடத்தின் தன்மை ( Site Condition ) 2) அபிவிருத்திக்கான செலவு ( Development Cost) 3. நிலத்தகுதி (Land Suitability) 4) பராமரிப்பு திறன் (Operatinal Efficiency) 5) அபிவிருத்தியால் பாதிப்பு (Development impact over ) ஆகிய காரணிகளை கருத்தில் கொண்டும், மேற்கண்ட 5 இடங்களில் அரிசி பெரியாங்குப்பம் கிராமம் புல எண் 117/2 அரசுக்கு சொந்தமான இடம் மட்டுமே, தற்போதைய பேருந்து நிலையத்திலிருந்து 6.8 கிலோ மீட்டர் தூரமாக இருந்தாலும், இடத்தின் பரப்பளவு (Area) இடத்தின் பயன்பாட்டிற்கான வடிவமைப்பு (Shape of the site ) வெள்ளமட்டம் (Elevation ) நிலம் வாங்குதல் ( Land Procurement ) இடம் சீரமைத்தல் ( Site preparation ) இடத்திற்கு வெளியே சாலை அமைத்தல் (Offssite preparation cost ) புறவழிச்சாலை தூரம் ( Distance to the Bye Pass ) வருவாய் இல்லாமல் பேருந்துகள் இயக்கப்படுவதற்கான செலவு ( Fleet operator expenses ) இயற்கை சூழல் பாதிப்பு ( Natural environment ) நிலவியல் சூழல் பாதிப்பு ( Physical Environment ) சமூக சூழல் பாதிப்பு ( Social Environment ) பொருளாதார சூழல் பாதிப்பு (Economical environment) எதிர் காலத்தில் மேற்படி இடத்தை சுற்றிலும், இம்மாநகராட்சி கடலூர் உள்ளூர் திட்டக் குழுமத்துடன் இணைந்து விரிவு அபிவிருத்தி திட்டங்கள் கொண்டு வந்து செயல்படுத்துவதற்கு ஏற்ப ஏராளமாக காலி இடங்கள் இவை அனைத்திலும் மற்ற இடங்களை காட்டிலும் இவ்விடம் அதிக மதிப்பீடு பெற்றுள்ளதால் அரிசி பெரியாங்குப்பம் இடம் மட்டுமே புதிய பேருந்து நிலையம் அமைக்க தகுதியான இடம் என அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மற்றொரு நிறுவனமான Terra Amatta Design Consorium வல்லுனராலும் அரிசிபெரியாங்குப்பம் கிராமம் புல எண் 117/2 அரசுக்கு சொந்தமான இடம் மட்டுமே தற்போதைய பேருந்து நிலையத்திலிருந்து 6.25 கி.மீ. தூரத்தில் இருந்தாலும், .. பேருந்து நிலையம் அமைக்கும் அளவிற்கு போதிய இடம் உள்ளதாலும், Class A இடம் சமதளமாக இருப்பதாலும், வெள்ள காலங்களில் பாதிப்படைய வாய்ப்பில்லாததாலும், இடம் அரசுக்கு சொந்தமானதாலும், புறவழிச் சாலையிலிருந்து 250 மீட்டர் தொலைவில் மிக அருகில் இருப்பதாலும், கடலூர் நகருக்குள் வெளியூர் பேருந்துகளால் ஏற்படும் போக்குவரத்து நெரிசல் குறைய வாய்ப்புள்ளதாலும், திட்டமிட்ட நகரம் உருவாக வாய்ப்புள்ளதாலும், சுற்றியுள்ள பகுதிகள் நன்கு வளர்ச்சியடைய வாய்ப்புள்ளதாலும், இவ்விடத்திலேயே புதிய பேருந்து நிலையம் அமைக்கலாம் என அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் கடலூர் மாநகராட்சியின் புதிய நவீன பேருந்து நிலையம் அமைப்பதற்கு ஏதுவாக அரிசிபெரியாங்குப்பம் கிராமம் புல எண் 117/2 ல் அரசுக்கு சொந்தமான 17.87 ஏக்கர் பரப்பளவு இடத்தை இம்மாநகராட்சிக்கு நில உரிமை மாற்றம் செய்து தரவும், அவசர அவசியம் கருதி (முன்நுழைவு அனுமதி வழங்கக் கோரியும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு பிரேரணை அனுப்பப்பட்டது.

மேற்படி இடத்திற்கு ரூ.2,53,74,918/– நிலமதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டு மேற்படி இடத்தை கடலூர் மாநகராட்சிக்கு நில உரிமை மாற்றம் செய்பதை பின்னிறுத்தி திட்டத்தின் முக்கியத்துவம் கருதி அவசரம் கருதி முன்நுழைவு அனுமதி வழங்க அனுமதி கோரி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு பிரேரணை அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

**நில அபிவிருத்தி :**

அறிக்கையாண்டில் நகரமைப்பு அலுவலர் நிலை 1 மற்றும் அனுமதிக்கப்பட்ட மூன்று நகரமைப்பு ஆய்வர் பணியிடங்களில் ஒருவர் மட்டும் அறிக்கையாண்டு முழுவதும் தொடர்ந்து பணியாற்றி வந்துள்ளார். அறிக்கை ஆண்டில் அனுமதிக்கப்பட்ட கட்டிட விண்ணப்பங்கள் பற்றிய விபரம் கீழ்க்கண்டவாறு :

| | | | |
|---|---|---|---|
| 1) | அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடங்கள் | – | 28 |
| 2) | அறிக்கையாண்டில் வரப்பெற்ற கட்டிட மனுக்கள் விபரம் | – | 323 |
| 3) | ஏற்கப்பட்டது | – | 247 |
| 4) | மறுக்கப்பட்டது | – | 76 |

நில அளவை தொடர்பான மனுக்கள் பெறுவதற்காக வட்டாட்சியர் அலுவலக அளவையர் ஒருவர் தலைமையில் அயற்பணி அடிப்படையில் கடலூர் நகராட்சி அலுவலக வளாகத்தில் தனி அலுவலகமாக இயங்கி வருகிறது. TSLR. பட்டா போன்றவை பணிகள் இவ்வலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது

**<u>நீத்தார் இறுதி அஞ்சலி செய்ய அரசின் மானியம் :</u>**

அரசாணை எண் 92 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை நாள் 27.07.2010ன்படி அட்டவணை இனத்தவர்களுக்கு, நீத்தார்க்கு ஈமச்சடங்கு செய்ய ரூ. 2.00,000/– அரசினால் வழங்கப்படுகிறது. அறிக்கையாண்டில் இத்தலைப்பின் கீழ் விண்ணப்பதாரர்களுக்கு ஈமச்சடங்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது.

**<u>பொது வருவாய்கள் :</u>**

அறிக்கையாண்டில் வரவு விபரங்கள்

**<u>2023– 2024</u>**

| | | | |
|---|---|---|---|
| 1) | வரியினங்கள் | 2844.12 | இலட்சம் |
| 2) | நகராட்சி கட்டிட வாடகை | 359.99 | இலட்சம் |
| 3) | கட்டணங்கள் மற்றும் பயன்பாட்டு கட்டணங்கள் | 481.26 | இலட்சம் |
| 4) | மானியங்கள் | .18 | இலட்சம் |
| 5) | பிற வருமானங்கள் | .56 | இலட்சம் |
| 6) | வங்கிகள் மூலம் வட்டி | .23 | இலட்சம் |
| | **மொத்தம்** | **.47** | **இலட்சம்** |

அறிக்கையாண்டில் வரி மற்றும் வரியில்லா இனங்களின் வசூல் விபரம்

2020–2021 மற்றும் 2021–22 ஆகிய நிதியாண்டுகளில் கேட்பு வசூல் நிலுவை விபரம்

(ரூ. இலட்சத்தில்)

| வருடம் | கேட்பு | | | வசூல் | | | நிலுவை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நிலுவை | நடப்பு | மொத்தம் | நிலுவை | நடப்பு | மொத்தம் | நிலுவை | நடப்பு | மொத்தம் |
| **2022–2023** | 6362.08 | 2764.90 | 9126.98 | 1502.83 | 1651.68 | 3154.51 | 4859.25 | 1113.22 | 5972.47 |
| **2023–2024** | 6794.80 | 3221.33 | 10016.13 | 1424.71 | 2185.49 | 3610.20 | 5370.09 | 1035.83 | 6405.92 |
| மொத்தம் | 13156.88 | 5986.23 | 19143.11 | 2927.54 | 3837.17 | 6764.71 | 10229.34 | 2149.05 | 12378.39 |

**நிதி நிலைமை :**

அறிக்கையாண்டில் **2023–2024** நகராட்சியின் அனைத்து கணக்கு தலைப்புகளிலும் வருவாய் மற்றும் செலவு விபரம்

| தலைப்பு | வரவு | செலவு |
|---|---|---|
| பொது நிதி | 415527998.96 | 491734189.91 |
| குடிநீர் விநியோகம் | 101815252.46 | 74191671.41 |
| கல்வி நிதி | 37400168.41 | 5793642.00 |
| மொத்தம் | 55,47,43,419.83 | 57,17,19,503.22 |

**பொதுக்குறிப்பு :**

அறிக்கையாண்டில் மாண்புமிகு மேயர், துணை மேயர், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஆணையர், நகர்நல அலுவலர் , நகரமைப்பு அலுவலர், மேலாளர், மற்றும் கணக்கர் ஆகிய அலுவலர்களும் அனைத்துப் பணிகளையும் எதிர்கொண்டு சீரிய முறையில் நிர்வாக பணிகள் செய்து முடிக்கப்பட்டது.

**மாநகராட்சி அலுவலகம்,**
**கடலூர்**
**நாள் 18.03.2024**

**ஆணையாளர்,**
**கடலூர் மாநகராட்சி**